மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்
முன்னிலை: திரு.பி. ஜெய்சங்கர், பி.ஏ.எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்
**2025** ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் **3** ஆம் நாள் வியாழக்கிழமை
அசல் வழக்கு எண். **39/2023**
**in**
**CNR.NO.TNDG180037482023**

C. அமராவதி .... வாதி

- எதிர்-

1. குருசாமி
2. P. பொன்னுச்சாமி
3. P. ராஜேந்திரன் .... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது இறுதியாக 25.03.2025 அன்று இந்த நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர். N. கணேசன் அவர்கள் ஆஜராகியும், 1 வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள். A. மாரியப்பன் மற்றும் D. கண்ணன் ஆகியோர்கள் ஆஜராகியும், 2 வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள். P. பழனிவேல் மற்றும் G.மனோஜ்குமார் ஆகியோர்கள் ஆஜராகியும், பின்னர் 2, 3 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதம் மற்றும் சாட்சிய, சான்றாவணங்களையும், வழக்கு கோப்பினைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

தீர்ப்புரை

பிராது சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் வழங்கும்படிக்கும், அதன் தொடர்பரிகாரமாக பிராது சொத்தில் வாதியின்

அனுபவத்தில் 2, 3 பிரதிவாதிகளோ, அவர்கள் வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்த வகையிலும் தொந்தரவும், ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாதென்று நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும், தாவா செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்களுக்கும் வழக்கு.

**1)** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்**:-**

1. தாவாச்சொத்தாக கூறப்பட்டுள்ள ஆத்தூர் வட்டம், கீழக்கோட்டை கிராமம், அயன் சர்வே எண். 279/ 3 இல் கட்டுப்பட்ட 62 செண்டில் மேல்புறம் செண்டு 50 உள்ள நிலத்தில் உள்ள நிலத்தை மனையடிகளாக பிரித்து K. முருகன் என்பவர் விற்பனை செய்து வந்தார். அவ்வாறு விற்பனை செய்து வந்ததில் இந்த வழக்கின் 1 வது பிரதிவாதியின் குமாரத்தி கருப்பாயி என்பவர் K. முருகன் என்பவரிடமிருந்து மேற்படி சொத்தில் 4 மற்றும் 5 நிர் காலி மனையிட பிளாட்டுகளாக தன் சுயசம்பாத்தியம் மற்றும் சேமிப்புகளிலிருந்து வந்த தொகையை கொண்டு தகுந்த பிரதிபிரயோஜனம் செலுத்தி 05.05.2015 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்தார்.

2. மேற்படி 1 வது பிரதிவாதியின் மகள் கருப்பாயி அம்மாளுக்கும் இந்த வழக்கில் 2, 3 பிரதிவாதிகளின் உடன்பிறந்த சகோதரர் P. முத்துச்சாமிக்கும் 1987 ஆம் ஆண்டு திருமணம் நடந்து இல்லறவாழ்க்கை நடத்தி வந்ததில் மேற்படி இருவருக்கும் வாரிசுகள் பிறக்காத நிலையில், கருப்பாயி அம்மாளின் கணவரான P. முத்துச்சாமி என்பவர் 08.02.2013 ஆம் தேதி இறந்துவிட்டார். அதன்பின்பு மேற்படி கருப்பாயி அம்மாளும் அவர் 05.05.2015 ஆம் தேதியில் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து எவ்வித ஆவணமும் எழுதி வைக்காத நிலையில் கடந்த 26.12.2016 ஆம் தேதியில் இறந்துவிட்டார்.

3. மேற்படி கருப்பாயிஅம்மாள் இறந்தபின்பு அவரது தாயாரும் 1 வது பிரதிவாதியின் மனைவியுமான வெள்ளையம்மாளும் கடந்த 27.04.2017 ஆம் தேதி அன்று இறந்துவிட்டார். எனவே, மேற்படி இறந்துபோன கருப்பாயி அம்மாளுக்கு இவ்வழக்கின் 1 வது பிரதிவாதியே சட்டப்படியான ஒரே வாரிசு என்ற நிலையில் லேட். கருப்பாயி அம்மாளின் சொத்துக்கள் அனைத்தும் 1 வது பிரதிவாதிக்கு பூரண உரிமை பாத்தியப்பட்டு அனைவரும் அறியும் வண்ணம் வெளிப்படையாகவும், நிராட்சேபணையாகவும் 1 வது பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார்.

4. மேலும் இறந்துபோன கருப்பாயி அம்மாளுக்கு 1 வது பிரதிவாதி மட்டும்தான் வாரிசு என்று வாரிசு சான்றிதழ் கேட்டு ஆத்தூர் தாலுகா, வட்டாட்சியரிடம் 1 வது பிரதிவாதி 13.06.2017 ஆம் தேதி மனு செய்துள்ளார். அவ்வாறு மனு செய்ததில் இறந்துபோன கருப்பாயிக்கு நேரடி வாரிசுகள் குறித்த விபரங்கள் விசாரணையில் அறிய இயலவில்லை. அதனால் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு 1 வது பிரதிவாதிக்கு 13.06.2017 ஆம் தேதி வாரிசு சான்றிதழ் தர மறுத்து குறிப்பாளை வழங்கியுள்ளார்.

5. 1 வது பிரதிவாதி இறந்த தன் மகள் கருப்பாயம்மாளுக்கு தான் ஒரு மட்டும்தான் வாரிசு என்று வாரிசு விளம்புகை பரிகார் கேட்டு அ.வ.எண். 71/2019 இல் ஆத்தூர் வட்டாடசியர், மற்றும் மாவட்ட ஆட்சியர் திண்டுக்கல் ஆகியோர் மீது வழக்கு தொடர்ந்தார். மேற்படி வழக்கின் முடிவில் இறந்துபோன கருப்பாயம்மாளுக்கு இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 15 இன் படி இறந்துபோன ஒருவரின் சொத்தானது முதலில் அவரது மகன் மற்றும் மகன் மற்றும் கணவருக்கும் சேரும். மேற்படி வாரிசுகள் இல்லாத நிலையில், தாய், தந்தைக்கு சென்றடையும் என்பதால் இறந்துபோன கருப்பாயிக்கு அவரது தந்தை மட்டும் உயிருடன் உள்ளதால் அவர் வாரிசு என்ற நிலையை அடைகிறார்

என்று முடிவு செய்து மேற்படி அ.வ.எண். 73/2019 வழக்கில் 1 வது பிரதிவாதிக்கு சாதகமாக 21.09.2021 ஆம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டது.

6. அதன் அடிப்படையில் லேட். கருப்பாயிக்கு 1 வது பிரதிவாதி மட்டும் வாரிசு என்று ஆத்தூர் வட்டாட்சியர் அவர்கள் 10.02.2022 ஆம் தேதி வாரிசு சான்றிதழ் வழங்கியுள்ளார். மேற்படி வாரிசு சான்றிதழ் பெற்று பிராது சொத்தையும், லேட். கருப்பாயி பெயரிலுள்ள ஸ்தாவர, ஜங்கம சொத்துக்களுக்கு 1 வது பிரதிவாதிக்கு பூரண உரிமை ஏற்பட்டு அனுபவம் செய்து வந்தார். பின்பு வாதியிடம் தகுந்த பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டு பிராது சொத்தை பொறுத்து 1 வது பிரதிவாதி, வாதியின் பெயருக்கு 23.02.2023 ஆம் தேதி ஒரு கிரைய சாசனம் எழுதிக்கொடுத்து மேற்படி ஆவணத்தை சின்னாளபட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 547/2023 ஆக பதிவு செய்து கொடுத்து சுவாதீனமும், அன்றையதினமே வாதி வசம் ஒப்படைத்துவிட்டார்.

7. மேற்படி கிரைய தேதியிலிருந்து தாவாச்சொத்தை வாதி சுவாதீனம் பெற்று வெளிப்படையாக பலரும் அறியும் வண்ணம் அனுபவம் செய்து வருகிறார். மேலும் சொத்திற்கான பட்டாவையும் தன் பெயரில் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுத்து அதன்படி சர்வேயரின் உதவியுடன் கடந்த 10.07.2023 ஆம் தேதி சொத்தை அளந்து அத்துமால் பார்த்து சுற்றிலும் கம்பிவேலி போடுவதற்கான வேலையில் ஈடுபட்டார்.

இந்நிலையில் 2, 3 பிரதிவாதிகள் இருவரும் இறந்து போன லேட். கருப்பாயி என்பவரின் கணவருடன் பிறந்த சகோதரர் என்று சொல்லிக் கொண்டு பிராது சொத்தில் வாதியின் கிரைய உரிமையை மறுத்து பிராது சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததை வாதி தடுத்துவிட்டார். இருப்பினும் தாவாச் சொத்தில் 2, 3 பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்றும், எனவே, சொத்தை ஆக்கிரமிப்பு செய்யாமல் விடமாட்டோம் எனக் கூறி வருவதாகவும், மேற்படி 2, 3

பிரதிவாதிகள் மிகுந்த ஆள்பலமும், பணபலமும் உடையவர்கள் ஆவார்கள். ஆனால் வாதி ஒரு பெண் என்பதாலும், 2, 3 பிரதிவாதிகளின் அக்கிரம, அடாவடி நடவடிக்கைளை நீதிமன்ற உத்தரவின் மூலமாகவே தடுக்க இயலும் என்பதாலும் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவாப்படி தீர்ப்பளிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**( 2)** பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்

**1.** வாதியின் பிராது சங்கதிகளில் இப்பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவராவார். பிராது பாரா **4** இல் சொல்லப்பட்ட சங்கதிகளை **1** வது பிரதிவாதி முழு மனதுடன் ஏற்றுக்கொள்வதாகவும் கூறப்பட்டுள்ளது.

**2.** தாவாசொத்து ஆத்தூர் தாலுகா, கீழக்கோட்டை கிராமம், அயன் சர்வே **279/3** இல் கட்டுப்பட்ட நிலத்தில் **50** செண்ட் நிலத்தை வீட்டு மனையடிகளாக **K.**முருகன் என்பவர் விற்பனை செய்து வந்தார். மேற்படி **K.**முருகன் என்பவரிடமிருந்து **1** வது பிரதிவாதி குருசாமி ஆகிய இப்பிரதிவாதியின் மகள் கருப்பாயி என்பவர் காலிமனையிட எண்கள் **4** மற்றும் **5** ஆகிய மனையிடங்களை மேற்படி கருப்பாயி என்பவரின் சுய சம்பாத்தியத்தில் கடந்த **05.05.2015** இல் ஒரு பதிவு செய்யப்பட்டட கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்று அனுபவித்து வந்தார்.

**3.** மேற்படி கருப்பாயி என்பவருக்கும், **2, 3** பிரதிவாதிகளான பொன்னுச்சாமி மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்களின் உடன்பிறந்த சகோதரர் **P.** முத்துச்சாமி என்பவருக்கும் கடந்த **1987** ஆம் வருடம் திருமணம் நடைபெற்றது. மேற்படி கருப்பாயிக்கும், முத்துச்சாமிக்கும் நடந்த இல்லற வாழ்க்கையில் எவ்விதமான வாரிசுகளும் பிறக்காத நிலையில், முத்துச்சாமி கடந்த **08.02.2013** ஆம் தேதியன்று அவரது மனைவியான கருப்பாயியை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். மேற்படி கருப்பாயி

அம்மாளும் அவர் கடந்த **05.05.2015** இல் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் கடந்த **26.12.2016** இல் காலமாகிவிட்டார்**.** கருப்பாயி அம்மாளின் இறுதிசடங்கையும்**,** கருப்பாயி அம்மாளின் தந்தை என்ற முறையில் இந்த **1** வது பிரதிவாதி குருசாமி வாரிசாக இருந்து முன்னின்று செய்துள்ளார்**.**

**3.** இவ்வழக்கின் **2, 3** பிரதிவாதிகளான பொன்னுச்சாமி மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் கருப்பாயி அம்மாளின் இறப்பிற்கு கூட வரவில்லை**.** அதன்பிறகு கடந்த **27.04.2017** ஆம் தேதியன்று **1** வது பிரதிவாதியின் மனைவி வெள்ளையம்மாள் என்பவர் இறந்துவிட்டார்**.** எனவே**,** மேற்படி இறந்துபோன கருப்பாயி என்பவருக்கு இந்து வாரிசுரிமை சட்டப்படி **1** வது பிரதிவாதியே சட்டப்படியான ஒரே வாரிசு என்ற நிலையில் இறந்துபோன கருப்பாயிஅம்மாளின் அனைத்து சொத்துக்களுக்கும் பூரண உரிமை பாத்தியப்பட்டு ஊரில் உள்ள அனைவரும் அறியும் வண்ணம் வெளிப்படையாக நிராட்சேபணையாக அனுபவம் செய்து வந்துள்ளார்**.**

**4.** மேலும்**,** இறந்து போன கருப்பாயி என்பவரின் வாரிசு சான்று கோரி **1** வது பிரதிவாதி ஆத்தூர் வட்டாட்சியரிடம் கடந்த **13.06.2017** அன்று மனு செய்தபோது**,** ஆத்தூர் வட்டாட்சியர் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு ஒரு குறிப்பாணை வழங்கினார்**.** எனவே**,** இப்பிரதிவாதி அ**.**வ**.** **73/2019** என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்**.** இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 15 இன் படி இறந்துபோன ஒருவரின் சொத்தானது முதலில் அவரது மகன் மற்றும் மகன் மற்றும் கணவருக்கும் சேரும். மேற்படி வாரிசுகள் இல்லாத நிலையில், தாய், தந்தைக்கு சென்றடையும் என்பதால் இறந்துபோன கருப்பாயிக்கு அவரது தந்தை மட்டும் உயிருடன் உள்ளதால், **1** வது பிரதிவாதிக்கு சாதகமாக கடந்த **21.09.2021** அன்று தீர்ப்புரை பகரப்பட்டுள்ளது**.** அதன்

அடிப்படையில் **1** வது பிரதிவாதி இறந்துபோன கருப்பாயி என்பவரின் வாரிசு என்று ஆத்தூர் வட்டாட்சியரிடம் கடந்த **10.02.2021** அன்று வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளார்**.**

**5.** இந்நிலையில்**, 1** வது பிரதிவாதி மூத்த குடிமகன் என்பதாலும் மருத்துவ செலவிற்காகவும் தாவாச்சொத்தை கடந்த **23.02.2023** ஆம் தேதியன்று சரியான பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டு தனது மற்றொரு மகளான இவ்வழக்கின் வாதிக்கு சின்னாளபட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்**. 547/2023** இன்படி கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் செய்து மேற்படி சொத்தின் சுவாதீனத்தையும் அன்றையதினமே வாதியிடம் ஒப்படைத்து விட்டார்**.** ஏற்கனவே **1** வது பிரதிவாதி வாதிக்கு தாவாச்சொத்தைப் பொறுத்து பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் எழுதிக்கொடுத்து சுவாதீனத்தையும் வாதியிடம் ஒப்படைத்துவிட்டதாலும்**,** வாதி **1** வது பிரதிவாதியை அலைக்கழிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்**.** எனவே**,** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும்**.**

**3) 2** வது பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்

**1.** வாதியின் வழக்கு உண்மையல்ல**.** வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படியும்**,** நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல**.** பிராதில் வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல**.** வீண் அலைக்கழிப்பு செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை எடுத்துரைத்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்**.**

**2.** பிராது சொத்து **1** வது பிரதிவாதியின் மகளும்**, 2, 3** பிரதிவாதிகளின் சகோதரர் லேட்**.** முத்துச்சாமியின் மனைவியான லேட்**.** கருப்பாயி என்பவருக்கு பாத்தியப்பட்ட கிரைய சொத்தாகும்**.** பிராது சொத்து காலி மனையிடமாகும்**.** லேட்**.** கருப்பாயி என்பவரின் கணவரான லேட்**.** முத்துச்சாமி உயிருடன் இருந்தபொழுது

வலையபட்டி ஊர்கட்டில் வீடு கட்ட வேண்டி அதே ஊரைச் சேர்ந்த தம்மன் அம்பலம் மகன் பழனிச்சாமியிடம **2 1/2** செண்ட் நிலம் கிரையத்திற்கு வாங்கி அதில் வீடு கட்டினார். அவர் வீடு கட்டிய சமயம் அவருடைய இடத்தை சுற்றிலும் காலியிடமாக இருந்ததால் அதில் வீடு கட்ட தேவைப்படும் பொருட்கள் அனைத்தையும் போட்டு வைத்து வீடு கட்டி முடிக்க முத்துச்சாமிக்கு வசதியாக இருந்தது.

**3.** இவ்வாறான சூழ்நிலையில், **2** வது பிரதிவாதி அவ்வப்போது முத்துச்சாமிக்கு உதவியாக இருந்து வந்தார். இந்த விபரம் வாதி மற்றும் **1** வது பிரதிவாதிக்கும் மற்றும் வலையபட்டி ஊர்மக்களுக்கும் நன்கு தெரியும். மேலும் முத்துச்சாமியின் வீட்டை சுற்றிலும் முன்பு காலியிடமாக இருந்த இடத்தில் தற்போது நில உரிமையாளர்கள் வீடு கட்டிவிட்டதால் முத்துச்சாமியின் வீட்டிற்கு சென்று வருவதற்கு வேறு நடைபாதை இல்லாததால் பிராது சொத்தை முத்துச்சாமி கிரையத்திற்கு வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் தன் மனைவியான கருப்பாயிக்கு தனக்கு பின் ஒரு ஆதரவு தேவை என்ற எண்ணத்தில் தன் சுய சம்பாத்தியத்தில் ஒரு தொகையை அவரது மனைவி கருப்பாயியிடம் கொடுத்து வந்தார்.

**4.** இந்நிலையில் முத்துச்சாமி கடந்த **08.01.2013** ஆம் தேதி இறந்தபின்பு கருப்பாயி இப்பிராது சொத்தை கிரையம் வாங்க முயற்சி செய்து வந்தார். மேற்படி கிரையம் வாங்குவதற்கு **2** வது பிரதிவாதி பணம் கொடுத்து உதவுவதாக கூறியுள்ளார். அதனை ஏற்றுக்கொண்ட கருப்பாயி **2** வது பிரதிவாதி கொடுத்த ரூ**.50,000/-** உடன் சிறுக, சிறுக சேர்த்து வைத்த பணத்தை கொண்டு பிராது சொத்தை தனது பெயருக்கு கிரையம் வாங்கினார். மேலும் பிராது சொத்தை விற்கும் நிலை ஏற்படும் பட்சத்தில் பிராது சொத்தை **2** வது பிரதிவாதிக்கே விற்பதாக உறுதி அளித்திருந்தார். அந்த உறுதிமொழியை காப்பாற்றும் பொருட்டு, தான் இறப்பதற்கு **1** மாதத்திற்கு

முன்பாக பிராது சொத்தை **2** வது பிரதிவாதிக்கு கடந்த **11.11.2016** ஆம் தேதி ரூ**. 1,50,000/-**க்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்**.**

**5.** மேலும் பிராது சொத்தை லேட்**.** கருப்பாயி கிரையம் வாங்கிய நாளிலிருந்து பிராது சொத்தில் பிரதிவாதியே போர்படப்பு போட்டும்**,** மாடுகள் கட்டியும் எருக்குழி வெட்டியும் தன் சுவாதீனத்தில் வைத்து தொடர்ந்து அனுபவித்து வருகிறார்**.** இந்நிலையில் கருப்பாயி இறந்தவுடன் கருப்பாயியின் வாரிசு என்று நீதிமன்றத்தில் தீர்ப்பு பெற்று அதன் அடிப்படையில் **1** வது பிரதிவாதி தன் மகளான வாதிக்கு **23.02.2022** ஆம் தேதியில் கிரையம் செய்து கொடுத்துள்ளார்**.** உண்மையில் பிராது **11.11.2016** ஆம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கிரைய சொத்தாகும்**.** பிராது சொத்தை பொறுத்த மட்டில் வாதி ஒரு **Name Conder** மட்டுமே ஆவார்**.** பிராது சொத்தின் அனுபவம் முழுவதும் **2** வது பிரதிவாதியின் வசமே இருந்து வருகிறது**.**

**6.** இந்நிலையில் பிராது சொத்து வாதியின் பெயரில் உள்ளது என்பதால் **1** வது பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில் வாதி பிராது சொத்தை **2** வது பிரதிவாதி அனுபவித்து வருவதற்கு அடிக்கடி தடையும்**,** இடையூறும் செய்து வருகிறார்**.** அதனால் கடந்த **24.08.2023** மற்றும் **01.12.2023** ஆகிய தேதிகளில் வாதிக்கும்**, 1** வது பிரதிவாதிக்கும் தங்கள் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பியும்**,** வாதியும்**, 1** வது பிரதிவாதியும் இதுவரை பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை**.** பிராது சொத்தை வாதி அனுபவிக்காத நிலையில் உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல**.** மேலும் பிரதிவாதிகளுக்கு உடல்நிலை சரியில்லாமல் நீண்ட நாட்களாக வழக்கறிஞரை சந்திக்க இயலாததால் உறுத்துக்கட்டளை மனு எண்**. 1/2023** க்கு ஆட்சேபணை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது**.** தாவா வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கு எந்த அதிகாரமும் இல்லை**.** வாதியும்**, 1** வது

பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**4).** வாதிகள் தரப்பு வழக்குரை மற்றும் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை ஆகியவற்றைப் பரிசீலனை செய்து கடந்த **21.01.2025** அன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதா?
2. தாவாசொத்து வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறதா?
3. தாவாவில் வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
4. தாவாவில் வாதி கோரிய நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
5. தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் யாவை?

5). வாதிகள் தரப்பு சாட்சியாக வா.சா.1 ஆக வாதி சின்னதுரை என்பவர் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6) 1** மற்றும் **2** எழுவினாக்களுக்கான தீர்வு

**1).** 1 வது பிரதிவாதியின் மகளான கருப்பாயி அம்மாள் என்பவர் முருகன் என்பவரிடமிருந்து 05.05.2015 ஆம் தேதியில் தாவாச்சொத்தை கிரையம் பெற்றதாக கூறியுள்ளதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 ஆன முருகன் என்பவர் கருப்பாயி என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் மேற்படி கருப்பாயி என்பவர் 05.05.2015 ஆம் தேதிய கிரைய சொத்தை பொறுத்து எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் கடந்த 26.12.2016 ஆம் தேதியில் இறந்துவிட்டதாக கூறியுள்ளதற்கு ஆதரவாக

வா.சா.ஆ.2 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கருப்பாயி என்பவருக்கும் அவரது கணவரான முத்துச்சாமி என்பவருக்கும் இல்லறவாழ்க்கை நடத்தி வந்ததில் வாரிசுகள் பிறக்கவில்லை என்றும் மேற்படி கருப்பாயி அம்மாள் இறந்தபின்பு அவரது தாயாரும் 1 வது பிரதிவாதியின் மனைவியுமான வெள்ளையம்மாளும் கடந்த 27.04.2017 ஆம் தேதி அன்று இறந்துவிட்டதாகவும் கூறப்பட்டுள்ள நிலையில் இறந்துபோன கருப்பாயி அம்மாளுக்கு அவரது தந்தை என்ற முறையில் இவ்வழக்கின் 1 வது பிரதிவாதியே சட்டப்படியான ஒரே வாரிசு என்பதற்கு ஆதரவாக **21.09.2021** அன்று ஆத்தூர் நீதிமன்ற அ.வ.எண். 73/2019 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ-3 ஆகவும், மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் ஆத்தூர் வட்டாட்சியரால் 1 வது பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேலும் 23.02.2023 தேதியன்று 1 வது பிரதிவாதி அவரது இரண்டாவது மகளான வாதிக்கு தாவாச்சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ-5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவாச்சொத்து கருப்பாயி என்பவருக்கு கிரைய பாத்தியப்பட்டது என்பதும், மேற்படி கருப்பாயி என்பவருக்கும் அவரது கணவரான முத்துச்சாமி என்பவருக்கும் வாரிசுகள் எதுவும் பிறக்கவில்லை என்பதும், மேற்படி கருப்பாயி என்பவரின் தந்தையான 1 வது பிரதிவாதி மட்டுமே கருப்பாயி என்பவருக்கு சட்டப்படியான வாரிசு என்பதும் உறுதியாகிறது.

3. மேலும், அ.வ.எண். 73/2019 வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் ஆத்தூர் வட்டாட்சியரிடம் வா.சா.ஆ-4 ஆன வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளதும், இறந்துபோன கருப்பாயி என்பவருக்கு 1 வது பிரதிவாதி வாரிசு என்ற அடிப்படையில் தாவாசொத்தை தனது இரண்டாவது மகளான இவ்வழக்கின் வாதிக்கு சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் செய்துள்ளதாக 1 வது பிரதிவாதியின்

எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையிலும், தாவாச்சொத்து 2 வது பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருவதாக எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் தாக்கல் செய்து நிரூபிக்கவில்லை.

4. மேலும், தாவாச்சொத்தை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ-2 ஆன நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் மாதிரிவரைபடத்தை பரிசீலனை செய்கையில், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில், " தாவாச்சொத்திற்கு அருகில் வசிப்பவர்களிடம் தாவாச்சொத்தின் உரிமை தற்போது யாரிடம் உள்ளது என்ற கேள்விக்கு தாவாச்சொத்துக்கு அருகில் வசிக்கும் பூசாரி மனைவியிடம் தாவாச்சொத்து யார் அனுபவித்து வருகிறார் என்று கேட்டதற்கு பொன்னுச்சாமி( பிரதிவாதி) அனுபவித்து வருகிறார் என்று சொன்னார்..." என்றும், " கருப்புசாமி மனைவி கிட்டுவிடம் விசாரித்ததில் தாவாச்சொத்தை பொன்னுசாமி ( பிரதிவாதி) அனுபவித்து வருகிறார். தாவாச்சொத்தில் கட்டப்பட்ட மாடுகள் பொன்னுச்சாமி( பிரதிவாதி) க்கு சொந்தமானது. தங்கராஜ் தாவாசொத்தில் வடக்கில் வசிப்பவர் தாவாச்சொத்தை பிரதிவாதி பொன்னுசாமி அனுபவித்து வருகிறார் என்று கூறினார்" என்று கூறப்பட்டுள்ளது.

5. தாவாச்சொத்தின் அமைப்பு, தாவாச்சொத்தின் அளவீடுகள் மற்றும் தாவாச்சொத்தின் பூஸ்துதி அமைப்புகளை பார்வையிட்டு, அளவீடு செய்து, அது குறித்து அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்வதற்காக மட்டுமே ஒரு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை வைத்து தாவாச்சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பதை நீதிமன்றம் தீர்வு காண இயலாது என்பதாலும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கை, வரைபடம் இவ்வழக்கில் தாவாச்சொத்தின் அனுபவத்தை

குறித்து குறிப்பிட்டுள்ள சங்கதிகளை இந்நீதிமன்றம் ஏற்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. மேலும் மனுதாரர்/ வாதி தரப்பிலும், மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கை, வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மேற்படி சங்கதிகள் குறித்து ஆட்சேபணை செய்து எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் உள்ள சங்கதிகளை இந்நீதிமன்றம் ஏற்க மறுப்பதுடன், வாதி தரப்பு சாட்சிய, சான்றாவணங்களின் மூலமாக தாவாச்சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், தாவாச்சொத்து வாதியின் அனுபவத்தில் இருந்து வருவதாக எழுவினா 1 மற்றும் 2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>7) எழுவினா 3 மற்றும் 4 க்கான தீர்வு</u>

1. பிராது சொத்து **1** வது பிரதிவாதியின் மகளும்**, 2, 3** பிரதிவாதிகளின் சகோதரர் லேட்**.** முத்துச்சாமியின் மனைவியான லேட்**.** கருப்பாயி என்பவருக்கு பாத்தியப்பட்ட கிரைய சொத்து என்பதை **2** வது பிரதிவாதி அவரது எதிர்வழக்குரையில் ஒத்துக்கொண்டுள்ள நிலையில்**,** வாதியின் உடன் பிறந்த சகோதரியான லேட்.கருப்பாயி என்பவருக்கு தாவாச்சொத்தை கிரையம் வாங்குவதற்காக **2** வது பிரதிவாதி ரூ**.50,000/-** பணம் கொடுத்ததாகவும்**,** மேற்படி லேட்**.** கருப்பாயி என்பவர் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக பிராது சொத்தை **2** வது பிரதிவாதிக்கு கடந்த **11.11.2016** ஆம் தேதி ரூ**. 1,50,000/-** க்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டதாகவும்**,** பிராது சொத்தை லேட்**.** கருப்பாயி கிரையம் வாங்கிய நாளிலிருந்து பிராது சொத்தில் **2** வது பிரதிவாதியே போர்பட்ப்பு போட்டும்**,** மாடுகள் கட்டியும் எருக்குழி வெட்டியும் தன் சுவாதீனத்தில் வைத்து தொடர்ந்து அனுபவித்து வருவதாகவும்**,** கூறியுள்ளதை நிரூபிக்கும் விதமாக

நீதிமன்றத்தில் முன்னிலையாகி எவ்வித சாட்சிய, சான்றாவணங்கள் மூலமாகவும் நிரூபிக்காத நிலையிலும், தாவாச்சொத்தைப் பொறுத்து வாதி கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களை வழங்குவதுதான் நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**8)** <u>எழுவினா **5** க்கான தீர்வு</u>

வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை ஆகியவற்றை பரிசீலனை செய்கையில் வாதிக்கு வேறு எந்த பரிகாரத்தையும் வழங்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9)** முடிவாக,

பிராது சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்பரிகாரமாக பிராது சொத்தில் வாதியின் அனுபவத்தில் 2, 3 பிரதிவாதிகளோ, அவர்கள் வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்த வகையிலும் தொந்தரவும், ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாதென்று நிரந்தரஉறுத்துக்கட்டளை பிறப்பித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்கு செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லி, கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை திருத்தி, 2025 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

( Sd.Thiru.P.Jaisankar)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,ஆத்தூர்.

<u>இணைப்பு:-</u>

<u>வாதி தரப்பு சாட்சிகள்:-</u>

வா.சா.**1 ..** திரு.சின்னத்துரை

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>:-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 05.05.2015 | கருப்பாயி என்பவரின் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 26.12.2016 | கருப்பாயி என்பவரின் இறப்புசான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.3 | 21.09.2021 | ஆத்துரர் நீதிமன்ற அ.வ.எண். 73/2019 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 10.02.2022 | வாரிசு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.5 | 23.02.2023 | 1 வது பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>,<u>சான்றாவணங்கள் :</u>

இல்லை

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 26.02.2024 | நீதிமன்ற ஆணையரின் அறிக்கை |
| நீ.ம.சா.ஆ.2 | 26.02.2024 | நீதிமன்ற ஆணையரின் வரைபடம் |

( Sd.Thiru.P.Jaisankar)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,ஆத்தூர்.